"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

# கன்ரபரி தமிழ்ச் சங்கம்
# Canterbury Tamil Society

## தமிழ்ப் பாடசாலைக் கையேடு
## Tamil School Handbook

2018

"தமிழால் இணைவோம் தமிழோடு உயர்வோம்"

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார் -

# கன்ரபரி தமிழ்ச் சங்கம்

# செயற்குழு – 2018

**<u>தலைவர்:</u>**
திரு. சந்திரசேகரி தயாகரன்

**<u>உதவித்தலைவர்:</u>**
திரு. பிரதீபன் ராஜேந்திரா

**<u>செயலாளர்:</u>**
திரு. சுரேந்திரன் சிவலிங்கம்

**<u>பொருளாளர்:</u>**
திருமதி. கிருபா ஞானசுகாதிபன்

**<u>ஆசிரியர்கள்:</u>**
திருமதி. கிருபா ஞானசுகாதிபன்
திருமதி. ராதிகா பார்த்தீபன்
திருமதி. சுபா சுரேந்திரன்
திரு. நிவேதனன் திரவியம்
திரு. கர்ணன் சண்முகசுந்தரம்

**<u>இணை ஆசிரியர்கள்:</u>**
திருமதி. சிவகாமி அம்பலவாணர்
திருமதி. தனுஜா தயாகரன்
திரு. உமாசாந்தன் பாலேந்திரநாதன்
திரு. ஞானசுகாதிபன் சிவசுப்பிரமணியம்

**<u>கலாச்சார ஒருங்கிணைப்பாளர்:</u>**
திருமதி. கௌசல்யாதேவி விஜயகுமார்

**<u>விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்:</u>**
திரு. உமாசாந்தன் பாலேந்திரநாதன்

**<u>கல்வி ஒருங்கிணைப்பாளர்:</u>**
திரு. கர்ணன் சண்முகசுந்தரம்

# முகப்பு

கடல்கள் கடந்து, கண்டங்கள் கடந்து இந்த இயற்கை எழில்கொஞ்சும் நன்னகரில் எம்மை ஒன்றிணைத்த தமிழன்னைக்கு முதற்கண் வணக்கங்கள். இங்கு நாம் பல்லினக் கலாச்சாரங்களுக்கு மத்தியில் வாழ்கின்ற போதும், எமக்கான அடையாளமாகத் தனிமெருகுடன் என்றும் மிளிர்வது அழிவற்ற தமிழ்மொழியேயாம். அத்தகைய செம்மொழியைத் தொலைத்தோமெனின், நாம் எம் சுயத்தையே தொலைத்தவராகின்றோம். அவ்வாறானதொரு இழிநிலையைத் தவிர்ப்பதற்கு, எம்மொழியையும், பண்பாட்டையும், கலாச்சார விழுமியங்களையும் அடுத்துவரும் தலைமுறைக்குக் எடுத்துச் செல்வது எம் தலையாய பணியாகும்.

அப்பணியில் கன்ரபரி தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையும் தன்னை இணைத்துக் கொண்டு, தமிழை முதல்மொழியாகக் கற்க வாய்ப்பற்ற சூழலில் வளர்கின்ற எம் சிறார்களுக்கு, கடந்த பல ஆண்டுகளாக முத்தமிழை அடிப்படையிலிருந்து போதித்து வருகின்றது. அச்சீரிய பணியை, தொடரும் கல்வியாண்டிலும் செவ்வனே முன்னெடுத்துச் செல்வதில் இறும்பூது எய்துகின்றோம்.

மேலும், ஆரம்பிக்கப் போகும் கல்வியாண்டுக்குரிய திட்டங்களை சிறுவரைபாக்கி இக்கையேட்டினூடாக உங்கள்முன் சமர்ப்பித்துள்ளோம்.

ஆக்கமுறத் திறனாய்ந்து, கருத்துரைக்குக.

நன்றிகள் பல.

"தமிழினைப் பொதுவில் வைப்போம்"

தமிழ்ப் பாடசாலைக் குழாம்

பூங்கா நகரம்

சித்திரை 2018

முதற்பதிப்பு: சித்திரை 2018 First Edition: April 2018


## தொகுப்பு:

கன்ரபரி தமிழ்ச் சங்கம்
த. பெ. இல: 6739
மேல் ரிக்கர்ட்டன்
கிறைஸ்றச்சேர்ச் 8442

**Compiled by:**

Canterbury Tamil Society Inc.
PO Box: 6739
Upper Riccarton
Christchurch 8442

## தொடர்புகட்கு:

மின்னஞ்சல்: tamilschool@canterburytamilsociety.org
இணையத்தளம்: www.canterburytamilsociety.org


## பாடசாலை நேரசூசி:

## நேரம்:

சனிக்கிழமை தோறும் பிற்பகல் 3:00 மணி முதல் 4:30 மணி வரை.

## இடம்:

Waimairi Road Community Centre
166, Waimairi Road
Ilam
Christchurch 8041

## முக்கிய திகதிகள்:

### இரண்டாம் தவணை:

05/05/2018 முதல் 07/07/2018 வரை

### மூன்றாம் தவணை:

28/07/2018 முதல் 22/09/2018 வரை

### நாலாம் தவணை:

13/10/2018 முதல் 15/12/2018 வரை

### பாடசாலை விடுமுறை நாட்கள்:

02/06/2018 – Queen’s Birthday Weekend
20/10/2018 – Labour Weekend
17/11/2018 – Canterbury Anniversary Weekend

## பெற்றோர், பாதுகாவலர் கடமைகள்

- பிள்ளைகளைத் தவறாது பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள். இது மாணவர்களின் தொடர்ச்சியான அறிவு வளர்ச்சிக்கும் பாடசாலையை ஒரு கட்டமைப்போடு நடாத்துவதற்கும் அவசியமானதொன்றாகும்.

- மிக இலகுவான முறையிலும் பிள்ளைகளின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் பிள்ளைகளுடன் தமிழில் உரையாடுங்கள். இது பிள்ளைகளின் மொழிப்பற்றை வளர்ப்பதற்கு உதவுவதுடன் அவர்கள் தமிழ் மொழியைப் பயில்வதையும் இலகுவாக்கும்.

- வாராந்த தமிழ்ப் பாடசாலை நிகழ்வுகளை பிள்ளைகளிடமிருந்து அறிந்து கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் கவனிப்பையும் தமிழ் மொழியில் உள்ள அக்கறையையும் எடுத்துக்காட்டுவதுடன் பிள்ளைகளை அடுத்த வகுப்பிற்கு தயார் படுத்தவும் உதவுங்கள்.

- நீங்களாக முன்வந்து பாடசாலைச் செயற்பாடுகளில் பங்கெடுங்கள், ஒத்துழையுங்கள், கருத்துத் தெரிவியுங்கள், உதவுங்கள். உங்களுக்கு தமிழ்ப் பாடசாலையிலுள்ள அக்கறை கண்டு மாணவர்கள் உற்சாகமடைவார்கள்.

- உங்கள் தொடர்பு இலக்கங்கள் அல்லது முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டால் அதனை எமக்கு அறியத் தாருங்கள்.

## மாணவர்கள் வகுப்பில் தெரிந்து கொள்ள வேண்டிய, பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

- வணக்கம் சொல்லுதல்.
- தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுதல்.
- பெரியவர்களிற்கு மரியாதை செலுத்துதல்.
- வகுப்பில் அமைதியாக இருத்தல்.
- சக மாணவருக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருத்தல்.
- பாடசாலைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருதல்.
- ஆசிரியர் சொல்வதை அவதானமாகக் கேட்டல்.
- பரிசு வாங்கும் போது இரண்டு கைகளாலும் வாங்குதல்.

## பாடப் பரப்பு

பாடசாலையில் போதிக்கப்படும் அடிப்படைத் தமிழ் பின்வரும் படிநிலைகளாகத் தொக்குக்கப் பட்டுள்ளது.

### நிலை ஒன்று:

- தமிழ் எழுத்துக்களை அறிதல், உச்சரித்தல், எளிமையான தமிழ் வார்த்தைகளை எழுதிப் பழகுதல், வாசித்தல், அர்த்தம் உணர்தல்.
  உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள். உயிர் மெய் எழுத்துக்கள் பழங்கள், காய்கறிகள், பூக்கள், பறவைகள், விலங்குகள் என்பவற்றின் பெயர்கள் உறவுமுறைகளை அறிதல்.
- ஓடுதல், படித்தல் போன்ற அன்றாட செயற்பாடுகளை அறிதல்.
- மழலைப் பாடல்களைப் பாடுதல்.
- படம் பார்த்து, கதை சொல்லுதல்.

### நிலை இரண்டு:

- எண்கள், திசைகள் அறிதல், மூவிடப் பெயர்கள்.
  இரு சொல் வாக்கியங்களை அமைத்தல் வாசித்தல், எழுதுதல், பொருளுணர்தல்.
- ஆரம்ப இலக்கணம்: பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள்.
- பேச்சுப் பயிற்சி.

### நிலை மூன்று:

- வினாச் சொற்கள்.
- சிறிய வாக்கியங்களையும், வினாக்களையும் கட்டமைத்தல், பொருளுணர்தல்.
- ஆரம்ப இலக்கணம்: திணை, பால், எண், இடம்.
  உயர்திணை, அஃறிணை, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றின்பால் பலவின்பால், ஒருமை பன்மை, தன்மை, முன்னிலை, படர்க்கை போன்றவற்றை உபயோகித்து சிறிய வாக்கியங்களையும் வினாக்களையும் கட்டமைத்தல்.
- பண்பு சுட்டுதல்.

### நிலை நான்கு:

- உரையாடல்களைக் கட்டமைத்தல், பொருளுணர்தல்.
- எழுவாய், செயப்படுபொருள் பயனிலை.
- காலங்கள்.

**கவனிக்க:**

மேற்குறித்த நிலைகள் பெற்றோருக்கு தமது சிறார்களுக்குரிய நிலையைத் தெரிவுசெய்ய ஒரு வழிகாட்டியாக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலையில், சிறார்களின் மொழியறிவோடு வயதினையும் கருத்திற் கொண்டே வகுப்புகள் பிரிக்கப்படும்.

புதிதாக உள்வாங்கப்படும் சிறார்கள், பெற்றோர்களுடன் கலந்துரையாடியபின் அவர்களின் நிலைக்கேற்ற வகுப்புகளில் சேர்க்கப்படுவார்கள்.

பிரிக்கப்படும் வகுப்புக்கள், ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை என்ற பாகுபாடற்று, அனைத்துச் சிறார்களும் மகிழ்ச்சியான ஒரு சூழ்நிலையில் கல்வி கற்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு நிலையும் ஓராண்டுக்கு மேல் விரிந்து செல்லக் கூடிய பாடப் பரப்பையும் பயிற்சிகளையும் கொண்டுள்ளன. இவ்வடிப்படை மொழியறிவு நிலைகளில் சிறந்து, தெளிந்து, தொடர்ந்து தமிழைச் சுவைக்க விரும்பும் சிறார்களுக்கு மேநிலை இலக்கண மற்றும் இலக்கிய வகுப்புகளை நடாத்த எப்பொழுதும் ஆவலாக உள்ளோம்.

## புதிய முயற்சிகள்

- ஆரம்பிக்கும் 2018 கல்வியாண்டு முதல், இணையவழிக் கல்வியை (E-LEARNING) அறிமுகம் செய்து, வீட்டுப் பயிற்சிகளை பெற்றோருக்கு அனுப்பி, பெற்றோர் தங்கள் சிறார்களின் கல்விச் செயற்பாடுகளில் தனிப்பட்ட முறையில் பங்குபெறுவதற்கு வகைசெய்யவுள்ளோம்.

- பெற்றோருடன் கலந்துரையாடிய பின் மூன்று முதல் ஐந்து வயது வரையான மழலைகளுக்கான பாலர் வகுப்பினை மீண்டும் விரைவில் தொடங்கவுள்ளோம்.

- மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக, பாடசாலை மண்டபம் மற்றும் நேரம் என்பவற்றில் மாற்றங்களை கொண்டுவருவதற்கு பெற்றோர், ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெறவுள்ளோம்.

- மாணவர்களின் மொழியறிவை மேலும் மேம்படுத்த பேச்சு, உறுப்பெழுத்து, எழுத்தாக்கம், மற்றும் வாசிப்புப் போட்டிகளை நடாத்தி சான்றிதழ்களையும் ஊக்குவிப்புப் பரிசில்களையும் வழங்கவுள்ளோம்.

- மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு நடமாடும் சிறுநூலகம் ஒன்றை அமைக்கவுள்ளோம். உங்களிடமிருந்தும் நூல் அன்பளிப்புக்களை வேண்டி நிற்கின்றோம். மாணவர்கள் நூல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிக்க முடியும்.

- ஒவ்வொரு தவணையும் பெற்றோர், பாதுகாவலர், ஆசிரியர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு இடையேயான சந்திப்புகள் இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளோம். இதன் மூலம் அனைவரதும் ஆக்கபூர்வமான கருத்துக்களை உள்வாங்கி பாடசாலையை மேலும் திறம்பட நடாத்திச் செல்லமுடியுமென நம்புகின்றோம்.

- சிறிது காலமாகத் தடைப்பட்டிருந்த தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான தமிழருவியை இவ்வாண்டு மீண்டும் அச்சேற்ற முனைகின்றோம். தமிழருவிக்கு மாணவர்களின் நல்லாக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

அன்பான பெற்றோர்களே, பாதுகாவலர்களே,

இக்கையேடானது, பாடசாலையின் அன்றாட மற்றும் விசேட நடவடிக்கைகளை உங்களுக்கு விளக்கும் நோக்குடனும், உங்கள் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அறியத்தரும் நோக்குடனும் தயாரித்து வழங்கப்படுகின்றது.

இதில் ஏதாவது திருத்தங்களோ, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்களோ இருப்பதாக நீங்கள் கருதினால் அதை செயற்குழுவினரின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

**செயற்குழு,**
**கன்ரபரி தமிழ்ச் சங்கம்**

*தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் அவனே*
*தமிழுயரத் தானுயர்வான் தான்.*

*- பாவாணர்*